1978 செப்டம்பர் 9]

Aruvikarai weir.

* *Q. No.* 120.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a regulator (road-*cum*-dam) in the place of Aruvikarai weir at Thiruvettar in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சின்னாற்று நீர்ப்பாசனம்.

*வினா எண். 121— திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், மத்துவராயபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிங்கபதி மலைவாழ் மக்களுக்கு சின்னாற்றில் வரும் தண்ணீரைப் பயன்படுத்த கூடுதல் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

இல்லை.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதியில் புதிய சாலைகள்.

*வினா எண். 122— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரைத் தொழிற்சாலை நிறுவனம் கரும்பு செஸ் நிதியாக ஆண்டுதோறும் எவ்வளவு ரூபாய் கொடுக்கிறது?

(ஆ) அந்த நிதியிலிருந்து அந்தப் பிரதேசத்தில் புதிய சாலைகள் நிர்மாணிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா?

1978 செப்டம்பர் 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) நெல்லிக்குப்பம் ஈ. ஐ. டி. பாரி சர்க்கரைத் தொழிற்சாலை நிறுவனம் 1974—75-ல் ரூ. 28.11 இலட்சமும், 1975—76-ல் ரூ. 27.99 இலட்சமும், 1976—77-ல் ரூ. 20.11 இலட்சமும், 1977—78-ல் ரூ. 9.33 இலட்சமும் கரும்பு செஸ் கொடுத்துள்ளது.

(ஆ) கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஈ. ஐ. டி. பாரி சர்க்கரை ஆலைப் பகுதியில் புதிய சாலைகள் அமைக்கும் பொருட்டு 1974—75-ல் ரூ. 7.05 இலட்சமும், 1975—76-ல் ரூ. 9.45 இலட்சமும், 1976—77-ல் ரூ. 8.60 இலட்சமும், 1977—78-ல் ரூ. 9.61 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன. ஏற்கெனவே, ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 36.31 இலட்சம் செலவு மதிப்பீடு உள்ள 5 சாலைப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ரூ. 8 இலட்ச மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் ஈ. ஐ. டி. பாரி ஆலைப் பகுதியில் புதிதாக எடுத்துக் கொள்ள சர்க்கரை இயக்குநர் ஒரு சாலைப் பணியை பரிந்துரை செய்துள்ளார். இது அரசின் ஆய்வில் உள்ளது.

மருத்துவப்பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு ஆசிரியர்கள்

*வினா எண். 123—திரு. வீ. கே. கோதண்டராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மருத்துவப்பட்ட மேற்படிப்புப் பிரிவில் போதுமான அளவு ஆசிரியர்கள், வல்லுநர்கள் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) போதுமான அளவு ஆசிரியர் உளர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாவட்ட மருத்துவ அலுவலர்கள்.

*வினா எண். 124—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மூன்றாண்டுகளுக்கு மேல், மாவட்டங்களில் பணியாற்றிவரும் District Medical Officer எத்தனை பேர்?

(ஆ) தொடர்ந்து அவ்விதம் பணியாற்ற அனுமதித்ததற்கு விசேஷ காரணங்கள் உண்டா?

TRUTH ALONE TRIUMPHS